பக்கங்கள்: ஆறு


Registered as a Newspaper


When, only The best is Good Enough
Buy Solide Pumps

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-


தரமானதே சிறந்தது என்றால்
சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி மீ 20 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 22 (05 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 175

# தேர்தலுக்காக போர் நிறுத்தம் என்ற நிலைப்பாடு பொருந்தாது

## விடுதலைப் புலிகள் சம்மதத்தோடு உத்தியோக பூர்வ பேச்சு வேண்டும்
## ஈரோஸ் பாலகுமார் சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 5

✶ இந்திய அரசாங்கம் போர் நிறுத்தம் ஒன்றைத் தானுகவே அறிவிக்கவேண்டும்.

✶ தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்மதத்தோடு, முறையான உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

✶ மாகாணசபைத் தேர்தலுக்கான போர் நிறுத்தம் என்ற நிலைப்பாடு பொருந்தாது.

இவ்வாறு ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன், இன்றைய அரசியல் நிலை குறித்துக் கருத்து வெளியிடுகையில் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

திரு. பாலகுமாரன் உதயனுக்கு இது குறித்துத் தெரிவித்ததாவது:-

இந்திய அரசு தானுக முன் வந்து போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்து, விடுதலைப் புலிகளின் சம்மதத்தோடு முறையான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

மேற்படி கூறியவாறு இல்லாமல், ஒரே நேரத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டு, அதை ஒரு அரசியல் அழுத்தமாகப் பயன்படுத்த முனைந்து போர் நிறுத்தத்தை அதற்குள் இணைந்த ஒரு நடவடிக்கையாக இந்திய அரசு செய்யத் திட்டமிட்டால், அது பொருத்தமானது ஆகாது.

மாகாணசபைத் தேர்தலுக்கான போர் நிறுத்தம் என்று இல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதலை நிறுத்தி இதை ஒரு விசேட பிரச்சினையாகக் கருதி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே போர் நிறுத்தம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



துப்பாக்கிகள் களவு போகும் ரேட்டைப் பார்த்தால் ஸ்ரீலங்காவின்பாடு எப்பவும் சிக்கலாகத்தான் இருக்கும் போல...!

## அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி ஈரோஸ் போராட்டம் நடத்தும்

யாழ்ப்பாணம், செப். 5

பூஸா முகாம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி எமது வெகுஜன, மாணவர் அமைப்புக்களுக்கு ஊடாகப் போராட்டங்களில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யக் கோரி ஈரோஸ் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் சித்திரவதை முகாம்களில் இன்று மரணத்தறுவாயில் உண்ணாவிரதிகள் இருக்கின்றனர். எத்தனையோமுறை இந்த அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரிக்கைகள், அறிக்கைகள், போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் எனப் பலவகைப்பட்ட முறைகளில் முயன்றும் பலனில்லை.

ஸ்ரீலங்கா அரசு கொடுங்கோன்மைத்தனமாகச் செயற்படுகிறது. ஒப்பந்தம் குறித்துப் பெரிதாகப் பேசிக்கொள்ளும் இந்திய அரசை இவர்கள் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையிலாவது தலையிடுமாறு கோரியும் பலனில்லை.

இது இந்திய அரசின் செயலற்ற தன்மையைக் காட்டுகின்றதா அல்லது

(6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் தாக்குதல்

## ஸ்ரீலங்கா சிப்பாய்கள் 9 பேர் கொல்லப்பட்டனர்

கொழும்பு, செப். 5

வவுனியாவில் மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 8 சிப்பாய்களும் 1 பொலீஸாரும் கொல்லப்பட்டனர்.

ரோந்து சென்ற இலங்கை இராணுவக் கோஷ்டிமீது போராளிகள் இத்தாக்குதலை நடத்தியதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலில் 4 இலங்கைச் சிப்பாய்கள் காயமடைந்தனர்.

நிலக்கண்ணி ஒன்றை வெடிக்க வைத்த விடுதலைப் புலிகள் அதில் சிக்குண்ட இலங்கை இராணுவ ரோந்துப் பிரிவின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## 21 பேர் கொண்ட குழு நேற்றுப் பூஸா புறப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.5

பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் இருக்கும் தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக 21 பேர் கொண்ட குழு ஒன்று பூஸா சென்றது.

நேற்றுக்காலை 8மணி அளவில் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து இக்குழுவினர் புறப்பட்டுச்சென்றனர்.

இக்குழுவினருக்குத் துணையாக அன்னையர் முன்னணிப் பிரமுகர் ஒருவரும் வடக்கு-கிழக்குப் பிரசை

(6ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பகுதிகளுக்கான

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவிகள் தடை இன்றிக் கிடைக்கும்

## யாழ். வந்த குழுவினர் உத்தரவாதம்

யாழ்ப்பாணம்,செப்.5

வெளி நாடுகளில் இருந்து வரும் தமிழ்ப் பகுதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் தடை இன்றிக் கிடைக்க வழி செய்யப்படும்

யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கண்டவாறு உறுதி அளித்து உள்ளனர். தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள நிலைமைகளை நேரில் அவதானித்து விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டது.

இந்தக் குழுவில் ஜெனிவா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு உசிற்ரு வோ, நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் திரு. திஸிஸ், நோர்வே செஞ்சிலுவைச் சங்க இலங்கைப் பிரதிநிதி திரு. ரேகால் ஆகியோரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. செசனனும் இடம்பெற்றிருந்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு என்று அனுப்பப்படும் நிவாரண உதவிகள் கொழும்பில் இருந்து இங்கு அனுப்பப்படுவதில்லை என்று யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் செய்த முறைப்பாடுகள் குறித்தும் மேற்படி குழுவினர் இங்கு விரிவாக ஆராய்ந்தனர்.

இதனை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருள்கள் உரியமுறையில் இங்கே கிடைப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதன்படி நோர்வே உதவித் திட்டத்தின் கீழ் யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கிளை உடனடியாக விஸ்தரிக்கப்பட உள்ளது.

அத்துடன் திருகோணமலையிலும் புதிதாக செஞ்சிலுவைச் சங்கக் கிளை ஒன்றும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இதன்படி வெளி நாடுகளில் இருந்து வரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

05 - 09 - 88
ஆவணி - 20
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.04 முதல் 01.34 வரை

ராகுகாலம்:
07.34 முதல் 09.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

3ஆம் பக்கத்தில்

அமரர் சபாலிங்கம் நினைவுமலர்

இங்கு வெளிவர உதவியவர்கள்:

✶ அமரர் நினைவு நிலைக்க அன்பர்களும், நண்பர்களும்

✶ யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம்

வடக்கு,கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பதாக

## தீர்வு காணப்படாத 3 அம்சங்கள் குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்?

கொழும்பு, செப் 5

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாக தீர்வு காணப்படாத மூன்று அம்சங்கள் குறித்து முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படலாம் என்று சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டிருக்கிறது.

★ வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஜனாதிபதி பிரகடனம்.

★ தமிழ் மொழியை உத்தியோக மொழியாக அமுல்நடத்தும் சட்டம்.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 26 பேரைத் தவிர ஏனைய அரசியல் கைதிகளை அடுத்த சில வாரங்களுக்குள் விடுதலை செய்வது.

இந்த அம்சங்கள் குறித்து இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே உயர் மட்டப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

எதிர்வரும் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர் கூடுதலாக வாக்களிப்பதற்குத் தேவையான நம்பிக்கையுணர்வை ஏற்படுத்துவதே இம்முயற்சியின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கான முதல் தேர்தல் நம்பத்தகுந்ததாக அமைய வேண்டும் என்பதில் புதுடில்லி அக்கறை காட்டுகின்றது.

### நகல் சட்டம் தயார்

ஒபரேஷன் செக்மேற் 3 ஐத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள உகந்த சூழ்நிலையை கருத்தில்கொண்டு இணைப்பைப் பிரகடனப் படுத்தும்படி இந்திய அரசு இலங்கையைக் கோரவுள்ளது.

தமிழை உத்தியோக மொழியாக்கும் நகல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### செய்திச் சாரம்

## தினமும் 3 துப்பாக்கிகள் தெற்கில் களவு

கொழும்பு,செப் 5

தென் இலங்கையில் தினமும் சராசரி மூன்று துப்பாக்கிகள் களவாடப்படுகின்றன.

இதுவரை கடந்த 3 மாதங்களில் 1,200க்கு அதிகமான துப்பாக்கிகள் களவாடப்பட்டுள்ளன என்று பொலீஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்திருக்கிறது. (இ-எ)

## முல்லைத்தீவு ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், செப் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்பொழுது காலை 10 மணி முதல் 12 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகிறது. கடந்த முப்பதாம் திகதி முதல் ஊரடங்கு தளர்வு அமுலுக்கு வந்தது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அங்கு முழுநேர தொடர்ச்சியான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது கடைகளும் கூட்டுறவுச் சங்கங்களும் அரிசி ஆலைகளும் திறக்கப்பட்டுள்ளன.

மக்கள் ஓரளவு வீதிகளில் நடமாடி அவசரம் அவசரமாக பொருள்களை கொள்வனவுசெய்து வீடுகளுக்கு திரும்பிச் செல்கின்றனர். (இ-92)

## யாழ் - கொழும்பு பஸ் சேவை இன்று ஆரம்பம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் - கொழும்பு பஸ் சேவை இன்று ஆரம்பமாகிறது.

இன்று காலை ஏழு மணிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இச் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

25 க்கும் அதிகமான பயணிகள் நேற்று ஆசனங்களைப் பதிவு செய்து கொண்டனர்.

யாழ் - கொழும்பு பஸ் கட்டணமாக 90 ரூபா அறவிடப்படும். பயணிகளின் நலன் கருதி பஸ் வெள்ளவத்தை வரை சேவையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தலைமறைவு

வீட்டு வேலைக்காக இருந்த சிறுவன் ஒருவன் வீட்டில் இருந்த பணம், நகை என்பனவற்றைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விட்டான் என்று கூறப்படுகிறது.

சங்குவேலி மானிப்பாய் பகுதியில் உள்ள சிவாஜி சிவயோகேஸ்வரி என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் நடந்தது. (இ-10)

## ரயில் இயந்திரக் கோளாறு

யாழ்ப்பாணம், செப். 5

நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து யாழ் நோக்கிப் புறப்பட்ட ரயிலின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ரயில் புறப்படும்போது 3மணிநேர தாமதம் ஏற்பட்டது.

பொல்காவலையைத் தாண்டியதும் ரயிலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

இதனை அடுத்து ரயில் பொல்காவலைக்குத் திரும்பக் கொண்டு செல்லப்பட்டு நிறுத்தப்பட்டது,

மருதானை ரயில்வே தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டு வேறு இயந்திரம் ஒன்று வரவழைக்கப் பட்டதை அடுத்து அதிகாலை 4-49 மணிக்கு பொல்காவலையிலிருந்து ரயில் யாழ் நோக்கிப் புறப்பட்டது.

எனினும் வவுனியா ரயில் நிலையத்தில் வழமையாகச் சழிக்கும் தாமதத்தைத் தவிர்த்தது மூலம் ரயில் குறிப்பிட்ட நேரத்துக்கு யாழ் நகர் வந்து சேர்ந்தது. (இ-9)

## ஏராளமானோர் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், செப் 5

தம்மை விடுதலை செய்யக் கோரி பூஸா தடுப்பு முகாமில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றுக் காலை அதிக எண்ணிக்கையானோர் கலந்து கொண்டார்கள்.

முத்துத்தம்பி அனாதை இல்லத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பது சிறுவர் சிறுமியர் சில மணி நேரம் இந்த உண்ணாநோன்பில் கலந்து கொண்டனர்.

மாங்குளம், முல்லைத்தீவு, வவுனியா, தென்மராட்சி ஆகிய பகுதிகளின் பிரசைகள் குழுக்களின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (இ-ஐ-5)

## நினைவுத் தூபிக்கு இன்று அடிக்கல்

வடமராட்சி, செப் 5

கடந்த ஆண்டு பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் உயிர்த்தியாகம் செய்த 12 போராளிகள் சார்பாக நினைவாலயம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

இதற்கான அடிக்கல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டித் துறையில் நடப்படும்.

50 அடி உயரமான இந்த நினைவாலயம் அவர்கள் உயிர்த்தியாகம் செய்த தினமான அக்டோபர் 5 ஆம்திகதி திறந்துவைக்கப் படும்.

இந்த 12 பேரும் அடக்கம் செய்யப்பட்ட இடமான திருவில் புனிதத் திடலில் இது நிறுவப்படும்.

வடமராட்சி மாண

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய PL-4 சிறிய லேத்மெசின் தேவைப் படுவோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (6217)

Honda Re-Condition மோட்டார் சைக்கிள் விற்பனைக்குஉண்டு. C 90, Hao 2, C 50, CF 50 Charly, ST 50, MB 5 என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Cycle Centre, 148, (230) K K. S. Road, Jaffna. TP 23807. (6222)

புதிய Honda, Reconditioned, புதிய, பழைய Model C 90, C 50, CD 90, CD 50, MD 90, Chaly மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. No 16, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (A. G. A) அலுவலகம் முன்பாக) (6125)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி சட்டில் மெத்தை Vono Spring சட்டில், கண்ணடி மேசைகள், கடைச் சோக்கேஸ், சாப்பாட்டு மேசைகள், Show Case, காரியாலய மேசைகள், மற்றும் பித்தளை கிளாஸ் வகைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (6103)

## தேவை

யாழ்ப்பாணம் சுண்டிக்குளிப் பகுதியில் 1½ பரப்பு வீடு கட்டக்கூடிய காணி தேவை. தொடர்பு: J. P. T, Ltd 3, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம் (6241)

பிரபலமான அச்சகத்திலும் பத்திரிகை ஸ்தாபனத்திலும் முதலீடு செய்யப் பங்காளர்கள் தேவை. முழுமையான விபரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும் தொடர்பு:- நம்நாடு இன்வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற், 192, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6219)

மெஷின் மைண்டர் (ஒட்லி சிலிண்டர்) அச்சுக் கோர்ப்போர்தேவை நேரில் வரவும். தொடர்பு:- நம் நாடு இன்வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற் 192, K.K.S. வீதி, சுன்னாகம் (6218)

## ஆள் தேவை

மரக்கடைச்சல் வேலை செய்ய தெரிந்தவரும், பழக விரும்புபவரும் ஆண், பெண் இரு பாலாரும்தேவை Payment on Piece Work. நேரில் வரவும் மகாலஷ்மி ரேட் குறாப், 75, [illegible] வீதி, யாழ்ப்பாணம் (6126)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## தேவை

சண்டிலிப்பாயில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தையல் வேலை, தெரிந்த பெண்பிள்ளைகளும், பூ வேலையில் அனுபவமுள்ள பெண்களும் உடன் தேவை, தொடர்பு க. வெங்கடேசன், C/o கு. விஜேதன் 'அகில் காமன்ஸ்' உத்தமி இல்லம், கல்வளை சண்டிலிப்பாய். (6247)

## மணமகன் தேவை

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இந்து மதத்தைசார்ந்த வேளாள குலத்தைச் சேர்ந்த படித்தபெண் வயது27 உயரம் 5 அடி 5 அங்குலம் பூச நட்சத்திரம் உடையவருக்கு சகோதரன் வரன் தேடுகிறார். அரசாங்கத் துறை ளில் வங்கிகளில் கூட்டுத்தாபனங் களில் கடமையாற்றுபவர் விரும்பத்தக்கது. போதிய சீதனம் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும் 188, C/o உதயன் யாழ்ப்பாணம். (6133)

## விடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஓரளவு வசதியுடன் ஒரு தனிவீடு வாடகைக்குத் தேவை, தொடர்பு கொள்ளவும்: 187 C/o உதயன் யாழ்ப்பாணம். (6121)

## மலிவு விற்பனைக்கு

தம்புரா, வயலின், மிருதங்கம், பக்திப்பாடல் கொண்ட கஸட்டுகள் திருமதி மணிமாறன் ஆற்றிய தெய்வீகச் சொற்பொழிவுகள் கொண்ட கஸட்டுகள் உண்டு. தொடர்பு கொள்ளவும் அ. அ. ஆனந்தம் 17/4Fiscal's Lane, ஐயனார் கோயில் வீதி, வண். மேற்கு. (6129)

## தவறிவிட்டது

பொன்னம்பலம் குமாரசிங்கம் ஆகிய நான் அடையாள அட்டையை திருநெல்வேலிச் சந்தையடியில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் அல்லது மயிலங்காடு, சுன்னாகம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன். சன்மானம் வழங்கப்படும் (6244)

அச்சுவேலியைச் சேர்ந்த நடராசா தெய்வேந்திரராசா என்பவரது பாஸ்போட் 31. 8. 88 அன்று மயிலிட்டிக்கும், அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன். (6248)

1. 9. 88 அன்று பரந்தனிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இ. போ ச பஸ்ஸில் வரும் வழியில் எனது அடையாள அட்டையும் இல; 670682145V, சாரதி அனுமதிப்பத்திரமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6246)

---

# A/L 89

## பகல் நேர வகுப்பு

10.30: காவிகள்
11.45: திரிகோண கணிதம்

ஆரம்பம்:
**05-09-1988**

ஆசிரியர்:
திரு. **ரவிமோகன்**

யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) (6069)

---

கட்டப்பிராய்
கலைமணி சனசமூக நிலையம்
நடாத்தும் நொக்கவுட் முறையிலான

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

இந்தப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் தமது பெயர், விலாசம் பங்குபற்றும் வீரர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் 25/- வும் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு: 12 - 9 - 88**
**போட்டி ஆரம்பம்: 17 - 9 - 88**

திரு. ந. தர்மகுலசிங்கம்,
(விளையாட்டுக் குழுத் தலைவர்)
கலைமணி சனசமூக நிலையம்,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்
(6134)

---

# ★ ருவிங்கிள் ஸ்ரார் ★
# ★ TWINNKLE STAR ★

**Dam Street, Colombo - 13**

எமது தயாரிப்புகளில் ஒன்றான பட்டர் பாண் (Butter Bread) வாங்கி அதன் லேபலின் பின்புறத்தில் பெயர், விலாசத்தை எழுதி ஒப்படைத்த வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் ஆகியோரில் அதிர்ஷ்டசாலியை சென்ற 30 ஆம் திகதி தெரிவுசெய்துள்ளோம்.

**தெரிவு செய்யப்பட்ட**

**வாடிக்கையாளர்:**
செல்வி ஜானகி நாகரட்ணம்,
ராணி வாசா,
உரும்பராய்.

**வியாபாரி:**
டி. வி. ஸ்டோர்ஸ்,
உரும்பராய்.

மூன்று தினங்களுக்குள் பரிசுப் பொருளான

**தங்கத்திலான பேன்ரன்**

உங்கள் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

விநியோகஸ்தர்கள்:— **ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி**
173/A கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

**சுவைத்திடுவீர் - பரிசுபெற்றிடுவீர்**

(6310)

---

# அஷ்டலக்ஷ்மி

**1988ஆம் ஆண்டு கலண்டர் போட்டி பரிசு பெறுவோர் விபரம்**

(1) ந. அருந்தவராணி 'ராணி இல்லம்' கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை.
(2) மே. யஸ்ரின் சௌகான், ஆவளை வீதி, சில்லாலை, பண்டத்தரிப்பு.
(3) நி. அங்குசன், பெரியகல்லாறு-2, கல்லாறு மட்டக்களப்பு.
(4) திருமதி R. சுப்பிரமணியம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(5) ரி. விக்கினேஸ்வரி 17 2/5 ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு - 12

கலண்டர் விற்பனையில் பரிசுபெறும் நிறுவனங்கள்.

(1) பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(2) திருமகள் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை, நெல்லியடி.
(3) துர்க்கா ஸ்ரேஷனர் சுன்னாகம்

**நல்லை ஆதீனத்தில் 10-9-88 அன்று ஆதீன முதல்வரால் பரிசுகள் வழங்கப்படும்.**

C/36

---

# MACK TRAVELS


Announces the Operation of domestic flights to and from Colombo / Jaffna with free transport to and fro PALALY / JAFFNA

**Don't leave home without consulting us,**

# MACK TRAVELS (Pvt.) Ltd., JAFFNA

(C/44)

---




நல்லூர் விளம்பர நிலையத்தில்

# அண்ணா கோப்பியின்

100 gm வெற்றுப் பக்கட்டுக்களில் 10 கொடுத்து 1 ரம்ளரை

**இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்**

(C/41)

---

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவ வருடம் ஆவணித்திங்கள் 20 ஆம் நாள் (05-09-88) திங்கட்கிழமை (இன்று) காலை 11-45 மணி முதல் 2-36 மணிவரையுமுள்ள தனுலக்கின சுபமங்கள நல்வேளையில்.

ஜி. பரஞ்சோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்
**ஆனந்தகுமார்**
(சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

திரு. சி. நாகரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**நாகநந்தினி**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நலங்கொண்டு பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் திருமண விழா மணமகளில்லத்தில் இனிது நடைபெறவிருப்பதால். அத்தருணம் தாங்களும் சுற்றம் சூழக் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. ஜி. பரஞ்சோதி குடும்பத்தினர்
"சிவசோதி பவனம்"
இமையாணன்,
உடுப்பிட்டி.

திரு. சி. நாகரத்தினம் குடும்பத்தினர்
"சிவனடி வாசா"
மார்க்கட் றோட்,
உடுப்பிட்டி.

★ (இரு வீட்டார் அழைப்பு) ★

(6131)

---

University of Jaffna, Sri Lanka.

**Certificate Course in Data Processing and BASIC Language Programming**

## Examination - 1987 Batch I

(Provisional results subject to confirmation by the Senate)

PASS LIST

**DISTINCTION PASS**

| Index No. | Name |
|---|---|
| CD/ 246 | Sivapathasundaram, Miss S |
| 215 | Renuka, Miss K. |

**MERIT PASS**

| Index No. | Name |
|---|---|
| CD/ 238 | Mathini, Miss S |
| 227 | Prabaharan, Mrs A |
| 231 | Rajayogan, R |
| 247 | Sivayogesvarasarma, S. |
| 249 | Sritharan, T. |
| 239 | Esaignani, Miss S. |
| 244 | Sithamparanathan, K. |
| 243 | Shanthakumar, S. |
| 204 | Chanthiran, S. |
| 207 | Ganeshalingam, K. |
| 201 | Vijayarani, Miss B. |
| 258 | Vimaleswaran, M. |

**PASS**

| Index No. | Name |
|---|---|
| CD/ 225 | Pakirathan, S. |
| 226 | Jeyajothy, Miss P. |
| 222 | Manivannan, B |
| 254 | Prithiviraj, T. |
| RCD/ 91 | Mathivanan, R. |
| 209 | Gnanasambanthan, M. |
| 256 | Venugopal, P. |
| 241 | Rajeetha, Miss S. |
| 210 | Idaikkader Shinniah, N. |
| 251 | Suriyanathan, V |
| 253 | Thevaratnam, Miss M. |
| RCD/ 078 | Mohanathas, K. |
| CD/ 252 | Thayaparan, T. |

**Prof. V. K. Ganesalingam,**
Actg. Vice Chancellor.

Examination Branch,
30-08-1988.

(C-45)


---

# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MD 90 (94 Sri 4408) விற்பனைக்குண்டு
தொடர்பு:
**யாழ்ப்பாணம் ரெப்ரிஜிரேஷன் சேவிஸ்**
75, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி சந்தி அருகில்) (6308)

---

# கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி




# பீகொக்

## கூந்தல் சாயம்

யப்பானிலிருந்துநேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது!
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத் தொடர்புகொள்ளுங்கள்!
விலை ரூபாய் 50/=க்குமேல்
சந்தைப்படுத்துவோர்
**சக்தி (பிரைவேட்) லிமிட்டெட்**
S.26. 2ம் மாடி, மத்திய கொழும்பு சுப்பர் மார்க்கெட், கொழும்பு:11
Colombo Central Super Market. Colombo:11

LANKA COMMERCIAL ARTISTS

---

# ★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ அமரர் கல்விமான் இ. சபாலிங்கம் நினைவஞ்சலி மலர் ★

## வாழ்க்கைக் குறிப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

— திருக்குறள் (50)

பிறப்பு: 04-02-1919
பெற்ருேர் : இளையதம்பி இலட்சுமிப்பிள்ளை

**கல்வி:**

1. **ஆரம்பக் கல்வி:**
நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, (1923—1928) வண்ணர்பண்ணை.

2. 1) **மேற்கல்வி**
விக்ரோறியாக் கலாசாலை, (1929—1931) கோலாலம்பூர்.
2) **மேற்கல்வி தொடரல்**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1932 -1937 மேவரை)
அ. யூனியர் கேம்பிரிட்ஜ் சான்றிதழ்.
ஆ. இலண்டன் மற்றிக்குலேஷன்.
இ. இன்ரர் மீடியற் (விஞ்ஞானம்) பயிலல் 936 - 1937).

3 **பட்டக்கல்வி**
இலங்கைப் பல்கலைக் கழகக்கல்லூரி (1937 - 1941)
விஞ்ஞானமாணி (B. Sc.) - தூயகணிதம், பிரயோகணிதம், பௌதிகம்.

4 **பட்டப்பின்கல்வி**
4. பட்டப்பின் கல்வி - அரசாங்க ஆசிரிய பயிற்சிக்கல்லூரி (1948-49)
பட்டப்பின் ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ்
Post Graduate Trained Certificate.

1 1) **ஆசிரியப்பணி**
1. உரும்பராய் இந்துக் கல்லூரி 1942- மே 1943
2. கொக்குவில் இந்துக் கல்லூரி - 1943-964
2) கற்பித்த பாடங்கள்- தூயகணிதம், பௌதிகம் (க. பொ. த. (சா/த) தூயகணிதம் (க. பொ. த. (உ/த)
3) விசேட முதல்தரம்- (Special Post Grade) ஆகஸ்ட் 1949
4) துணை அதிபர்- (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஜனவரி 1960- ஒக்டோபர் 1964
5) அதிபர்- யாழ்ப்பாண மத்திய கல்லூரி- ஒக்டோபர் 1964- யூன் 1971
தரஉயர்வு: தரம் 1 - யூலை 1967
தெரிவுத்தரம் - யூன் 1971
- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- யூன் 1971- யூலை 1975
6) ஓய்வு பெறல்- 1975 ஆகஸ்ட் (56 வயது)
7) சிரேஷ்ட கல்வி அலுவலர்- பவுச்சி, நைஜீரியா நவம்பர் 1975- ஆகஸ்ட் 1979
8) அதிதி விரிவுரையாளர்- பலாலி ஆசிரிய கலாசாலை நவம்பர் 1980- டிசம்பர் 1983

**2.தொழில் சங்க வாதி:**
1. தலைவர்- யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்கம் 1952 - 1953
2. கௌரவ செயலாளர்- வடமாகாண ஆசிரியர் சங்கம் 1953 - 1955
3. உபதலைவர்- வடமாகாண ஆசிரியர் சங்கம் 1955 - 1957
4. தலைவர்- வடமாகாண ஆசிரியர் ஒன்றியம் 1957 - 1958
5. உபதலைவர் - அகில இலங்கை ஆசிரியர் ஒன்றியம் 1958 - 1960
6. தலைவர்- தேசிய ஆசிரியர் ஒன்றியம் 1963 - 1964

3. தொழிற்சங்கப் பிரதிநிதி- வெளிநாடு செல்லல்
1. அகில இலங்கை ஆசிரியர் ஒன்றியப் பிரதிநிதியாகப்பாரிசில்நிகழ்ந்த ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்டமை ஜூலை 1959
2. ஷ்டி ஒன்றியப் பிரதிநிதியாக வாஷிங்ரனில் நிகழ்ந்த ஆசிரியர் மாநாட்டிற் கலந்து கொண்டமை ஆகஸ்ட் 1959

4. கல்விச் சுற்றுலா- பிரிட்டிஷ் கவுன்சிலின் அதிதியாகப் பிரித்தாயா சென்று அரசு ஒன்றியத்தின் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்தமை. செப்டம்பர் 1959

5. **கல்விசார் சங்கங்கள், கல்லூரி அதிபர் சங்கங்கள், சாரணர் இயக்கம் ஆகியவற்றில் பதவி வகித்துப் பணிபுரிதல்:**
1. தலைவர்- வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் 1959 - 1966
2. தலைவர்- வடமாகாண அதிபர்கள் சங்கம் 1672 - 1973
3. உபதலைவர்- அகில இலங்கை அதிபர்கள் சங்கம் 1973 - 1975
4. தலைவர்- வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கம் 1973 - 1975
5. அக்கிராசனர்- வடமாகாணச் சாரணர் சங்கம்

**6. சமயப் பணிகள்**
1. தலைவர் - அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்
2. தலைவர் - சைவ பரிபாலன சபை
3. ஆலோசகர், போஷகர் - நல்லை ஆதீனம்

**7. விளையாட்டு, மெய்வல்லுநர்துறைப் பங்களிப்புக்கள்:**
1. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பின்வரும் விளையாட்டு, மெய்வல்லுநர் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை.
அ) உதைபந்தாட்டம் 1934 - 1936
ஆ) கிரிக்கெற் 1936 - 1937
இ) மெய்வல்லுநர் 1936
தலைசிறந்த கோல்காப்பு வீரராகவும் பந்துத்தடுப்பு வீரராகவும் முறையே உதைபந்தாட்டக் குழுவிலும், கிரிக்கெற் குழுவிலும் விளங்கினுர்:
அ) துணைத்தலைவர் Vice Captaln உதைபந்தாட்டம் 1936.
ஆ) இலங்கைப் பல்கலைக்கழக உதைபந்தாட்டக் குழுவில் இடம் பெறல் (1937 - 1941) தலைவர் (Captain) 1940 - 1941.
இ) அகில யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் குழுவில்இடம்பெறல் (1942-1948) தலைவர் (Captain) 1945-1948.
ஈ) சர்வதேச உதைபந்தாட்ட நடுவர் தகுதியை எய்தல்.
உ) இலங்கை சீ ஏ ஏ ஏ (CAAA) யில் மெய்வல்லுநர் துறைஅலுவலர்.
ஊ) 1963 இல் பெங்களூரில் (இந்தியாவில்) நிகழ்ந்த ஒலிம்பிக் முன்னிலை உதைபந்தாட்டத்திற் கலந்துகொண்ட இலங்கைத் தேசிய உதைபந்தாட்டக் குழுவின் முகாமையாளராகச்செல்லல்.
எ) யாழ்ப்பாண விளையாட்டுச்சங்கம் 1943 இல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் உருவாக்கம், நிருவாகம், வளர்ச்சி ஆகியவற்றிற்காய் உழைத்தல்.
ஏ) யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம், அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கங்களின் செயல், நிறைவேற்றலுவலராகப் பணியாற்றல், 1943 - 1960.
ஐ) கௌரவ செயலாளர்-யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் (1945-1948-1949-1964)
2. தலைவர் - யாழ்ப்பாண உதைபந்தாட்ட விளையாட்டுச் சங்கம் 1968-1973
3. தலைவர் - யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் 1967-1969
4. தலைவர்- யாழ்ப்பாண அமைச்சூர் மெய்வல்லுநர் சங்கம் 1966-1968
5. தலைவர்- யாழ்ப்பாணக் கிறிக்கெற் சங்கம் 1970 - 1972
6. தலைவர் - யாழ்ப்பாணக் கூடைப்பந்தாட்டச் சங்கம் 1973 - 1975
7. தலைவர், உபதலைவர், செயலர் - யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் (1948 - 1968)

8: மறைவு - (இலண்டனில்) 3- 8- 1988

## செம்மனச் செல்வர் சபாலிங்கம்

சால்புடையார் சான்ருேர்; சான்ருேர் செம்மனச் செல்வர். சால்பு என்பது பண்பாடாகும். (Culture) சால்பு வேறு; நாகரிகம் (Civilization) வேறு. சால்பு அகத்தது; நாகரிகம் புறத்தது, பண்புடையார் பட்டுண்டு உலகம். மக்கட் பண்பில்லாதவர் மரம் போல்வர், ஆசையால் மனிதனுக்கு அறிவை விடப் பண்பாடே முக்கியம் இந்தப் பண்பாட்டில் திளைத்துச் சான்ருேனுய், செம்மனச் செல்வனுய் இசைபட வாழ்ந்து விளையாட்டுலகமும், கல்வியுலகமும், சமய உலகமும் வேதனையில் ஆழ இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டவர் தான் இளையதம்பி சபாலிங்கம் அவர்கள். இது நடந்தது 1988- 8- 3இல் பிறந்த மண்ணிலல்ல; இளைப்பாறிய மண்ணில்- இங்கிலாந்தில்.

சால்பிற்கும் கட்டளைக் கல் யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்:

தன்னில் தாழ்ந்தோரிடத்திலும் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளலே சால்பின் உரைகல் என்பது இதன்பொருள்.

**ஸ்போட்ஸ் மன்**

தோல்வியை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் பண்புடையவரை விளையாட்டுலகம் ஸ்போட்ஸ் மன் (Sportsman)என அழைக்கிறது. விளையாடுவோரெல்லாம் ஸ்போட்ஸ்மன் அல்லர். விளையாட்டுப் பண்புடையோரே ஸ்போட்ஸ்மன் என்பது என் கருத்து. சபாலிங்கம் அவர்களின் விளையாட்டுப் பண்பிற்கு ஓர் உதாரணம்:

1941 அல்லது 1942இல் எனநினைக்கின்றேன், அப்போதுதான் அவரைவிளையாட்டு மைதானத்தில் முதன்முதல் சந்தித்தேன் பொலீஸ் மைதானத்தில் (இன்று துரையப்பா விளையாட்டரங்கு) உதைபந்தாட்டம் நடக்கிறது- அவர் கோல்காப்பாளராக இருக்கிருர். கோல் போடக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று எனக்குக் கிடைக்கிறது. பந்தை அடிக்கும்பொழுது பந்தைப் பிடிப்பதற்காக எனது காலடியிற் பாய்ந்தார். பந்து கோலுக்குள், ஆனுல் எனது கால் அவர் முகத்தைப் பதம் பார்த்து விட்டது. ஊ, ஊ' என்று முகத்தைப் பொத்திக்கொண்டு நின்ருர். 'சொறி அண்ணே' எனக் கூறிக் கொண்டு அவரை அணுகினேன். முகத்திலிருந்து ஒரு கையை எடுத்துவிட்டு 'பரவாயில்லைத் தம்பி விளையாட்டில் இதெல்லாம் சகஜம்' என்று

### சி. மே. மாட்டின்

கூறிக்கொண்டு என் தோளில் தட்டினுர். அவரது வாயிலிருந்து சிறிது இரத்தம் வடிவதைக் கண்டு வருந்தினேன். அன்று அவர் கன்னையில் விளையாடிய எவரும் என் நினைவில் இல்லை. ஆனுல் அவர் மாத்திரம் நிலைத்து விட்டார். காரணம் அவர் ஒரு ஸ்போட்ஸ்மன்.

அவர் கோல் காப்பாளர் மாத்திரமல்ல விக்கெற் காப்பாளருங் கூட. நூதனம் என்னவென்ருல் அவர் மகனும் கோல் காப்பாளரும் விக்கெற் காப்பாளருமாவர். அதுமத்திரமல்ல அவரது தம்பியாரும் ஒரு சிறந்த கோல் காப்பாளர். சபாலிங்கம் அவர்கள் விளையாட்டில் மாத்திரம் காப்பாளரல்ல, வாழ்வில், பண்பின் காப்பாளருங் கூட அனைத்துலக உதைபந்தாட்ட நடுவராக (Fifa Refery) இருந்தும் மற்றவர்களைப் போல் கொக்கரிக்காத பண்பாளன்.

**மனிதத் தன்மை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள்வைக்கப்படும். என்பது வள்ளுவம் வாழ்வாங்கு வாழ்தல் என்பது பிறர் நலன்கருதி வாழ்தலாகும். சிறப்பாக ஏழைகள் மேல் இரங்கி வாழ்தல் மனிதத்துவத்தின்-மனிதத்தன்மையின் (Humanity) சிறந்த வெளிப்பாடாகும்.

ஓர் உதாரணம்:

சபாலிங்கம் அவர்கள் யாழ். மத்திய கல்லூரியில் அதிபராக இருந்த காலம் 'சொடிதுகொடிது வறுமை கொடிது' என ஔவையார் பாடினுரே அந்த வறுமையால் வாடியபையன் ஒருவன், யாழ். மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அறிவுத்தாகம் அதிகம். ஆனுல் அவன் வீட்டில் இரவில் விளக்கெரிவதில்லை. அடுப்பெரிவதும் அபூர்வம். தகப்பன் ஒரு குடிகாரன். அட்டமயலில் ஒரே சண்டை. இதனுல் அவன் இரவில் அயல் அடங்கியதும் தெருவோரத்திலுள்ள மின்கம்பத்தில் சாய்ந்து கொண்டு தெருவிளக்கிற் படிப்பது தான் வழக்கம். பாடசாலைச் செலவுகளைச் சமாளிக்க சனி ஞாயிற்றுக் கிழமைகளில் கூலி வேலைக்குச் செல்வதும் வழக்கம்.

இது விடயத்தைக் கேள்விப்பட்ட சபாலிங்கம் அவர்கள் விடயத்தைக் கேள்விப்பட்ட அன்றுதானே மாறுவேடம் பூண்டு — நாலுமுழவேட்டி, சண்டிக்கட்டு, வெறும் மேல், தலைப்பாகை, கையில் தடி - இவ்வாறு இரவு 0 மணிக்கு அவ்விடத்தை அடைகிருர். பையனுடன் கதைத்து உண்மையை அறிகிருர். இடையில் பையன் இவரை அடையாளங் கண்டு கொள்கிருன்; கூனிக்குறுகி நின்ருன். அடுத்தநாள் தன்னை அலுவலகத்தில் சந்திக்குமாறு கூறிச் சென்ருர் சபாலிங்கம் அவர்கள்.


சந்தித்தான்; சலுகைகள் பெற்ருன்; படிப்பதற்கு வசதிகள் பெற்ருன். அவன் இப்பொழுது ஒரு பொறியிலாளன்.

இது சபாலிங்கம் அவர்களின் மனிதத் தன்மையைக் காட்டும் ஒரு சிறு நிகழ்ச்சி இது.

அவர் ஒரு கணித பட்டதாரி, தெரிவுத்தர அதிபர், ஆசிரியர் சங்கத் தலைவர் - செயலாளர், அனைத்துலக ஆசிரியர் மகாநாடுகளில் ஆசிரிய சங்கப் பிரதிநிதியாகச் சென்றவர், கல்வி சம்பந்தமான சங்கங்களின் தலைவர், விளையாட்டு வீரன், பல்வேறு விளையாட்டுச் சங்கங்களின் தலைவர்-செயலாளர், சமயச் சார்புடைய சபைகளின் தலைவர், இவ்வாறு பட்டியல் நீள்கிறது.

ஆம், இவைகள் அவருடைய ஆளுமையைக்காட்டுபவை. இதை அநேகர் அறிவர். ஆனுல் அவருடைய உள்ளத்தின்ஆழத்தில் தேங்கிக் கிடக்கும் மனிதத்தன்மையை, சால்பை அறிந்தவர் சிலராகத் தான் இருப்பர்.

சபாலிங்கம் அவர்கள் ஒரு பண்புடையவிளையாட்டுவீரன், விளையாட்டுக்களின் தரமுயரப் பாடுபட்ட ஒருவர். ஆளுமை நிறைந்த அதிபர், கல்வி வளர்ச்சியிற் பங்கு கொண்ட பெரியார், சமயத் தொண்டன். இவற்றையெல்லாம்விட வாழ்வாங்கு வாழ்ந்தவர்; இசைபட வாழ்ந்தவர்;சால்புடைச் சான்ருேனுய் வாழ்ந்தவர். அவர் ஓர் அபூர்வப் பிறவி; செம்மனச் செல்வர்.



**அமரர் இளையதம்பி சபாலிங்கம்**
தோற்றம்: 04.02.1919
மறைவு: 03.08.1988

✶ "அதிபருள் மாணிக்கம்"
✶ "கடமையின் எல்லை நீ"
✶ "ஆசிரியராக, அதிபராக, சைவசமயியாக, விளையாட்டு வீரனுக எல்லோர் உள்ளத்திலும் உறைந்து விட்ட நடமாடும் தெய்வம்"
✶ "துணிவும், கண்டிப்பும், கருணையுள்ளமும் கொண்ட பெருந்தகை"
✶ "தன்னிகரில்லாத நிர்வாகத் திறமை கொண்ட அதிபரும் நல்லாசிரியனும்"
✶ "அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் துணிவுடன் செயற்பட்ட கல்விமான்களில் முதன்மையானவர்"
✶ "உண்மைக்கும், நேர்மைக்கும், உதாரணமானவர்"
✶ "சகாய நிதிகளை நிர்வகித்து ஆசிரியர்களின் பொருளாதாரம் வளம்பெற வழி வகுத்த பெருந்தகை"

(அமரர் சி. சபாலிங்கத்தைப் பற்றி யாழ். இந்துவின் ஆசிரியர் கூறியவை.)

## யாழ் இந்துவின் மைந்தன்

யாழ் இந்துவின் சமூகம் மிகப் பெரியது. இச்சமூக சேவைகளோ அதிலும் பெரியவை.

எம் சமுதாயத்துக்குக் காலத்துக்குக் காலம் வேண்டிய தேவைகளை நிரப்புவதற்கு எமது சமூக அங்கத்தவர்கள் என்றும் பின்நின்றது இல்லை. இது வரலாற்று உண்மை. இன்றும் நிரூபணமாகி வருகின்றது.

எம் சமூக, உயர் மைந்தர்களில் காலம்சென்ற அமரர் இ. சபாலிங்கமும் ஒருவர்

கல்வித் தேவையை நிரப்பிய புதல்வன் சமுதாயத்தின் தேவை அறிந்து நல்ல ஆசிரியராக, அதிபராக பல பிரபல்யமான பாடசாலைகளிலும் தன் கடமையை வழங்கியவர்.

இவரினுல் அக் கூடங்கள் அலங்கரிக்கப்பட்டன என்பதே பொருத்தமானது.

இதற்கு யாழ் இந்துவும் விதிவிலக்கல்ல. யாழ்ப்பாணத்தில் தொடங்கிய புகழ் வெளிநாடுகளிலும் பரவியது சர்வதேச கல்விக் கருத்தரங்குகள் ஊடாக –

இறந்த பின் ஒருவரை அதீத மனிதராகப் படைத்துப் பழகியவர்கள் நாம் – எவரையும் பாராட்டுவோம். அவன் அல்லவோ மனிதன் என்போம். இது சரியா? என நாம் சிந்திக்கவேண்டும்

இல்லை எனில் அமரர் சபாலிங்கத்துக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன?எல்லோரும் மகான்களா? எல்லோரும் சமூக சேவையாளர்களா?எல்லோரும்பெரும் பிறவிகளா? இச்சிந்தனையிலிருந்து உதித்தது தான்-"சபாலிங்கம் கல்விச்சேவையை அலங்கரித்த ஆசிரியன் - அதிபர்.

அவரின்ஆளுமை அவர் செய்த காரியங்களில் [illegible]

([illegible] பக்கம் பார்க்க)

**சு. டிவகலாலா**
செயலாளர்
யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்சங்கம்

## நினைவில் நீங்காத கல்விமான்

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவன் வாக்குக்கமையத் தோன்றிய கல்விமான்களுள் ஒருவராகத் திகழ்ந்து அமரத்துவம் பெற்ற நல்லாசான் அமரர் சபாலிங்கம் இன்று இல்லை. பூதவுடல் அழிந்த போதும் அவரது புகழுடம்பு நிலைத்து வாழும். அமரர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து கணிதமும், விஞ்ஞானமும் கற்பித்ததுடன் ஒழுக்கத்தை நிலை நிறுத்துபவராகவும் விளங்கினுர். விளையாட்டுத் துறையில் மாணவர்களை ஊக்குவித்ததுடன் கல்லூரியின் வெளிக்கள வேலைகளிலும் முன்னின்று உழைத்தவர். இச் செயற்பாடுகளினுல் மாணவ சமுதாயத்தின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்ற பெருமகனுவார்.

திருவாளர் C. K கந்தசுவாமி அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் துணை அதிபராகக் கடமையாற்றிப் பின்பு யாழ். மத்திய கல்லூரியில் அதிபராக திறம்படச் செயலாற்றிப் பின்னர் யாழ். இந்துவில் இளைப்பாறும் வரை அதிபராகவும் கடமை புரிந்துள்ளார்.

சிறந்த உதைபந்தாட்ட வீரராகிய சபாலிங்கம் அவர்கள் யாழ் மாவட்டத்தின் விளையாட்டுத்துறை நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினுர். பிறநாடுகளிலே நடை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உறைந்தனன் உள்ளந் தோறும்

இவர் 1919 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இம் மண்ணில் மலர்ந்தார். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி விண்ணுலகு எய்தினுர்.

இவர் தனது இளவயதில் சிறந்த மாணவனுகவும், விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார்.

இவர் ஓர் விஞ்ஞான பட்டதாரி. கணிதம், அவருக்கு கைவந்த ஒரு கலை, இவர் 32 ஆண்டுகள் தாய் நாட்டில் புரிந்த ஆசிரியர் சேவையில் 4 ஆண்டுகள் உப அதிபராகவும் 11 ஆண்டுகள் அதிபராகவும் அதுவும் தெரிவு நிலை அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

பின்னர் நைஜீரியநாட்டில் 5 ஆண்டுகள் சிரேஷ்ட கல்வி அதிகாரியாகக் கடமையாற்றினுர். 23 ஆண்டுகள் கணித பாட பிரதம பரீட்சகராக சேவையாற்றியுள்ளார். இவர் தனது சேவைக்காலம் முழுவதும் ஆசிரியர்களின் நீதிக்காக ஒரு தொழிற் சங்க வாதியாக இருந்து போராடியுள்ளார். பிற நாடுகளில் நடைபெற்ற ஆசிரியர் மாநாடுகள் தொழிற் சங்க சம்மேளனங்களில் இலங்கையின் சார்பில் பங்குகொண்டுள்ளார்.

**நா. நல்லையா**
(ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

சமூக சேவையில் மிகவும் ஈடுபாடுடைய இவர் அகில இலங்கை சைவ பரிபாலன சபை, சேக்கிழார் மன்றம், நல்லூர் ஆதீனம், சாரணர் சங்கம். மற்றும் விளையாட்டுச் சங்கங்களின் தலைவராக இருந்துள்ளார்

உதை பந்தாட்டக் குழுவின் கோல் பாதுகாவலராகவும், உப தலைவராகவும் இருந்துள்ளார். கிரிக்கெட் விளையாட்டில் விக்கட் கீப்பராகவும் ஆடியுள்ளார். பல்கலைகழகத்திலும் சிறந்த விளையாட்டு வீரராகவும் தலைவராகவும் இருந்துள்ளார். சர்வதேச போட்டியில் பங்குகொண்ட இலங்கைக் குழுவின் நிர்வாகியாக கடமையாற்றியுள்ளார்.

திறன் மிகு நிர்வா[illegible]ஸ்தன்
தீரமாய் எதையும் செய்வான்
அறிந்தவன் கணித பாட
ஆழத்தை ஆற்றல் மிக்கான்!
சிறந்தனர் விளையாட் டென்னும்
சீரிய துறையில் கூட!
உறைந்தனன் உள்ளந் தோறும்!
உயர்ந்தவர் உணர்வு தோறும்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றது!

**கணிதம்**

**G. C. E. (O/L) (ஆண்டு 11)**

* 5 மாதிரி வினாத்தாள்களும்
* 13 அலகுகளில் மீட்டல் பயிற்சிகளும் (விடைகளுடன்)

**விலை: ரூபா 18-50**

ஆக்கம்: வி. ச. சுப்பிரமணியம்

வெளியீடு:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6295)



**DAY CLASS - ஆரம்பம்: 5-09-88**

| | | | |
|---|---|---|---|
| 8-00 | CHEMISTRY | (Organic) | சண் B. Sc. |
| 9-00 | PHYSICS | (Heat) | மணியம் B. Sc. |
| 10-00 | PURE | (திரிகோண கணிதம்) | பிரேம்நாத் B. Sc. |
| 11-00 | APPLIED | (காவி) | பிரேம்நாத் B. Sc. |
| 10-00 | ZOOLOGY | (தொகுதிகள்) | கேதீஸ் B. Sc. |
| 11-00 | BOTANY | (இழையவியல்) | குணசீலன் B. Sc. |

**SCIENCE ACADEMY - JAFFNA**

(B. M. C க்கு முன்பாக, வெலிங்டன் சந்தி)

(6290)



## IMMEDIATE VACANCIES IN SAUDI ARABIA

1. CIVIL ENGINEER — 10 Years Experience, Salary SR 2000 — SR 2500
2. MECHANICAL — B.Sc. + 10 Years Experience, Salary — 2000 SR — SR 2500
3. ELECTRONIC ELECTRICAL — B. Sc. + 10 Years Experience — Salary — SR 2000 — SR 2500
4. ELECTRONIC TECHNICIAN — Diploma + 5 Years Experience — Salary SR 750 — SR 900
5. ELECTRICAL TECHINICIAN — Diploma + 5 Years Experience, Salary SR 750 — SR 900
6. TELEPHONE TECHNICAN — Diploma + 5 Years Experience — Salary SR 700 — SR 850
7. HEAVY EQUIPMENT MECHANIC — 7 Years Experience — Salary SR 750 — SR 900
8. AIR CONDITION TECHNICIAN (WINDOW/CENTRAL TYPE) — SR 700 — SR 800
9. PLUMPER — 5 Years Experience and English Speaking, Salary SR 600 — SR 700
10. CRANE MECHANIC — 5 Years Experience, English Speaking, Salary SR 750 — SR 900
11. AIRCON PRESSER MECHANIC — 5 Years Experience, English Speaking, Salary SR 750 — SR 900
12. DIESEL / PETROL MECHANIC — 5 Years Experience, English Speaking, Salary SR 650 — SR 800
13. BOILER TECHNICIAN — 5 Years Experience, English Speaking, Salary SR 650 — SR 750
14. MARINE ENGINEER — 5 Years Experience, Salary Negotiable
15. DOCTOR — M.B.B.S — 5 Years Experience, Salary Negotiable
16. LEATH OPERATER — 5 Years Experience, Salary Negotiable
17. AGRICULTURE ENGINEER — 5 Years Experience, Salary Negotiable
18. CLEANERS (AIRPORT) — Salary SR 500
19. CLEANERS (HOSPITAL) FEMALES — Salary SR 400, 30 — 44 Years SR 400
20. MASON — 5 Years Experience
21. CARPENTER — 5 Years Experience

Age 21 — 45 Years

22. TAILOR (Male) — 5 Years Experience with Cutter, Salary 700 SR

**KUWAIT**

1. DRIVER (With Gulf Licences) — Salary 50 KD
2. CLEANERS — Salary 30 KD

# T. V. Travels & Tourist

Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.

(C-23)


# முல்லைத்தீவிலிருந்து மக்கள் தொடர்ந்து வெளியேற்றம்

மாங்குளம், செப், 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து ஒரு வாரத்துக்கு மேல் அமுல் செய்யப்பட்டு வரும் ஊரடங்கை அடுத்தும் தாக்குதல்களை அடுத்தும் தண்டுவான், தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம், முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமப்பகுதி மக்கள் கையில் கிடைத்த பொருள்களுடன் பாதுகாப்புக்கருதி கிளிநொச்சிப் பகுதிகளில் தஞ்சம் அடைகின்றனர்.

மாங்குளத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. மாங்குளம் முல்லைத்தீவு வீதி ஒரு மாதமாக திறக்கப்படாத நிலையிலேயே மூடிக்கிடக்கிறது.

இதனால் முல்லைத்தீவு மாங்குளம் தபால் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் பெய்து வரும் மழையை அடுத்து இப்பகுதியில் பயிரிட்ட உப உணவு வகைகள் அழுகி நாசமாகியுள்ளன.

(இ-94)

# வடக்கு கிழக்கு தேர்தல் பற்றி பி.பி.சி செய்தியாளர்

லண்டன், செப். 5

பி. பி.சி செய்தியாளர் மார்க்டலி புதுடில்லியில் இருந்து அனுப்பிய செய்தி ஒன்றை பி.பி.சி வானொலி அறிவித்தது.

அச்செய்தி வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய காலம் வந்துவிட்டது என்று இந்திய அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துவிட்டது.

தேர்தலுக்கான காலத்தையும் திகதியையும் நிர்ணயிப்பது இப்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கையில் உள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் போது இந்திய அமைதிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் என்று இந்திய கொழும்பு அரசுக்குத் தெரியப்படுத்தி உள்ளது.

ஆயுதங்களை ஒப்படைத்து ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தேர்தலில் போட்டியிடலாம் என்று இந்தியா அறிவித்திருக்கிறது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போட்டியிடுமா? என்பது குறித்து இந்தியா சந்தேகம் தெரிவிக்கிறது.

இதனிடையில் இந்திய அரசு, இலங்கைத் தமிழருக்குத் தெளிவான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

"இந்தியா என்றும் பாதுகாப்பு வழங்கும் என்று தமிழர்கள் நம்பியிருக்க முடியாது. தங்கள் பகுதிகளில் ஸ்திரமான அரசு ஒன்றை நிறுவி தங்கள் பாதுகாப்பை தமிழர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்"— இதுவே இந்தியாவின் எச்சரிக்கை.

இப்படி பி. பி. சி செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## சுற்றிவளைப்பால் போக்குவரத்து தடைப்பட்டது

வட்டக்கச்சி, செப் 5

கிளிநொச்சியைச் சேர்ந்த கோவிந்தன் கடைச் சந்திப் பகுதி கடந்த வியாழக்கிழமை காலை அமைதிப்படையினரால் திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டது.

இப் பகுதியால் வந்தவர்கள் மறித்து வைக்கப்பட்டனர். இதனால் போக்குவரத்தும் தடைப்பட்டது.

அரச ஊழியர்கள், வியாபாரிகள், முதியோர்கள் கூட மறிக்கப்பட்டு வெயிலில் இருத்தி வைக்கப்பட்டனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் நண்பகல் ஒரு மணியளவில் விடுவிக்கப்பட்டனர். ஏனையோரைப் படையினர் அங்கிருந்து 155 ஆம் கட்டை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

எனினும் மாலை 4மணியளவில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

## பாடசாலை அபி. சபைக் கூட்டம்

பலாலி, செப், 5

கட்டுவன்புலம் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 1மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்துக்கு காங்கேசன் துறைக் கல்வி வட்டாரத்தின் கல்வி அதிகாரி திரு. பி. சண்முகராசா சமுகமளிக்கவுள்ளார். (இ-19)


## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக. கோப்பாய் தெற்கு சுவாமி நாதர் நகுலேஸ்வரர் ஆகிய யான் வெளிப்படுத்துவது.

யாழ் மாவட்ட நீதி மன்றத்தில் இல 657-ம் இலக்கத்தில் காணியின் வாடைகைக் காசு வழக்குத் தீர்ப்புக் கூறும் அளவில் இருக்கிறது. கோடு நடவாததால் தீர்ப்பு வரவில்லை.

சுவாமிநாதர் கனகசபைக்கு 1950-ம் ஆண்டு மாசி மாதம் 18ந் திகதி பிரசித்த நொத்தாரிசு வே. விஞசித்தம்பி 4919-ம் இலக்கத்தில் எட்டுப்பரப்புக் காணி என்னால் நிந்தமாக அறுதி விற்கப்பட்டது. இந்தக்காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் த. சின்னத்துரையால் 1949-ம் ஆண்டு ஆடி மாதம் 30ம் திகதி 329 சி. இலக்கத்தில் படம் வரையப்பட்டது. விற்றகாணி தவிர்ந்த மிகுதிக்காணி 8 பரப்பு எனக்குரியது.

1954-ம் ஆண்டு வீடு அமைப்புத்திணைக்களத்திற்கு ரூபா 47000க்கும் வட்டிக்கும் சுவாமிநாதர் கனகசபையும் நானும் ஈடு வைத்துள்ளோம். சு. கனகசபைக்கு என்னால் விற்கப்பட்ட 329 சி. காணிப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்பின் இருவர் காணிகளிலும் கட்டடம் அமைக்கப்பட்டது. சு. கனகசபைக்குரிய 8 பரப்பு எல்லையைத் தாண்டி எனது காணியிலும் சேர்த்துக் கட்டடம் அமைந்துள்ளது. இக்கட்டட ஊடுருவல் நிலத்தின் பெறுமதி தருவதாக வாக்களித்துள்ளார். ஊடுருவல் காணி நிலத்துக்கு நிலமோ அல்லது அதன் பெறுமதியோ தர வேண்டும். ஊடுருவல் காணி பிரச்சினை தீராமல் குறித்த சுவாமிநாதர் கனகசபை யாருக்காவது எச்சாதனமும் முடிக்க முழு உரிமை இல்லை என்றும், மீறி சாதனம் முடித்தால் அச்சாதனம் செல்லுபடியாகாது என்றும் பகிரங்கமாக வெளிபடுத்துகின்றேன்.

உண்மையுள்ள

சு. நகுலேஸ்வரர்

2.9.1988

( 6294 )



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
விவசாய மன்னன்
த. தங்கராசா அவர்கள்

தோற்றம்: 03 08 - 1938
மறைவு: 06 - 08 - 1988

எங்கள் அன்பும் பண்பும் நிறைந்து குடும்ப விளக்காய் ஒளிபரப்பி அணைந்த அன்புத் தந்தைக்கு ஆறாத்துயரமடைந்து எங்களின் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

[illegible]

(6301)


## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு

# திருமலை அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு செப் 5

தம்மை விடுதலை செய்யக் கோரி பூஸா முகாமிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நடத்தும் ஜனநாயக ரீதியிலான சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மதிப்பளித்து அவர்களை விடுதலை செய்யுமாறு திருகோணமலையைச் சேர்ந்த ஆறு அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

திருகோணமலை அன்னையர் முன்னணி, மாவட்ட இந்து இளைஞர் பேரவை, மாவட்ட அபிவிருத்தி ஒன்றியம், மாவட்ட மகளிர் நலன்புரி மன்றம், ரோட்டரிக் கழகம், அரச சார்பற்ற தொழிலாளர் ஒன்றியம் ஆகிய ஆறு அமைப்புக்களுமே இக்கோரிக்கையை விடுத்துள்ளன. ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மற்றும் பூஸா முகாம் பொறுப்பதிகாரி, இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜமீல் மொகமட், பிரிகேடியர் மிஸ்ரா, திருமலை மாவட்ட இணைப்பதிகா ஆகியோருக்கு மகஜர்கள் மூலம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன. (ஓ-ஐ)த்


## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும்



அன்னை மடியில்: 1-7-1950

அநியாய வேட்டில்: 15-3-1988

**இ. கு. சுப்பிரமணியம்**

அந்தியேட்டி: 7-9-88 திருக்கேதீஸ்வரத்தில்
வீட்டுக்கிருத்தியம்: 10-9-88 ஸ்கந்தபுரத்தில்

அன்று மலர்ந்த மகவை
நோக்கிடச் சென்றீரோ
சென்ற இடத்திலே ஈவிரக்கமின்றிக்
கொன்றனரே அந்தப் பாவிகள்
என்றென்றும் ஆறாதே எம் துயரே

ஞானத் தெளிவுடனே இவ்வுலகை நோக்கும் பண்பாளனே மீளாத் துயில் கொண்ட தங்கள் ஆத்மா சாந்தியடைவதாக,

மனைவி, குழந்தைகள், பெற்றோர், சகோதரங்கள், மாமா, மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

307, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி. (6282)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**சின்னையா தேவகுஞ்சரம்**
(குஞ்சரம்)
(வல்வெட்டித்துறை)

தோற்றம்: 1 - 6 - 1928
மறைவு: 7 - 8 - 1988

திதி: 6 - 9 - 88

அன்பின் தெய்வம் அம்மா!

எங்களை, சிறுவயதில் தந்தை இறந்து போகத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வளர்த்தெடுத்த பெருமை சொல்லிடங்காதவை. அம்மா நீங்கள் செய்த பெருமையினை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் மனதை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்திபெற இப்புனிதத் திருநாளில் எங்கள் கண்ணீர்ப்புஷ்பங்களை உங்கள் பாதங்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரினது அந்தியேட்டிக் கிரியை (6-9-1988) செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரி புவனம்.

சிவகுரு வித்தியாசாலை வீதி, வல்வெட்டித்துறை. (6257)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

**பொருள்:**

எத்தகைய பெருமைகளை உடையதாக இருந்த போதிலும், செயல்வகையால் சிறப்பு இல்லாதவரிடத்தில் அரண் பயனில்லாத தாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23073
05-09 1988 ச. வெ. இல 23


## மனித நீதியின் மற்றப் பக்கம்!

காணாமற் போனவர்களின் கதையை ஒரு வருட காலத்தோடு முடித்து விட இலங்கை அரசு அவசர அவசரமாகச் சட்டம் இயற்றியது எல்லோரும் அறிந்த விடயம். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் அந்தச் சட்டம் மக்கள் பிரதிநிதிகள் சபையான நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது!

அரசு அந்தச் சட்டத்தை இயற்றிய தன் உள்நோக்கத்தையும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முக்கியமாகத் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளையும், சம்பந்தப்பட்ட சட்டம் எந்தளவுக்கு அநீதியானது என்பதையும் இப்பத்தியில் ஏற்கனவே ஆராய்ந்திருந்தோம்:

''காணாமற் போவதற்குத் தேவை ஒரு வருடம்!'' என்ற தலையங்கத்துடன் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி அது பிரசுரமாகி இருந்தது.

தனது மட்டத்தில் காணாமற் போனவர் விடயத்தை ''மடக்கிவிட'' நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசு பெருமுயற்சி செய்திருக்கிறது என்ற விவரம் இப்போது தெரிய வந்திருக்கிறது.

இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 44 ஆவது வருடாந்த மாநாட்டில் இலங்கை அரசின் பிரதிநிதி ஒருவர்—

காணாமற் போனவர்கள் விடயத்தில் நீதியாகவும், தாராளமாகவும் நடந்து கொள்ளும் விதத்தில், மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்குழு இயற்றிய ஒழுங்கு விதி ஒன்றை மாற்றுவதற்கு எப்படி ஆலோசனை வழங்கினர் என்பதும்—

தனது முயற்சியை வெற்றியாக்குவதற்கு அவர் ''தலைகீழாக நின்று'' எடுத்துரைத்த கோணல் நியாயங்கள் எவை என்பதும்— நேற்றைய உதயனில் வெகு விவரமாக வெளியிடப்பட்டிருந்தன.

காணாமற் போனவர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எவ்வளவுக்கு 'அலர்ஜி' என்பதை, இலங்கைத் தரப்பில் ஆஜரான அந்தச் சட்ட மேதையின் விதண்டா, வேண்டா வாதங்கள் மூலம் எவரும் புரிந்து கொள்ளமுடியும்.

சர்வதேச மன்றம் ஒன்று வகுத்த விதியை, இலங்கை அரசின் நோக்கத்தை அடையும் விதத்தில் மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

பொது அமைப்போ, அரசாங்கமோ எதுவானாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விதத்தில் திட்டம் வகுத்து, நடைமுறைப்படுத்த வேண்டும்; அதுவே நடைமுறையும் நீதியுமாகும். ஆனால் இலங்கை அரசாங்கமோ தன்னையும், தனது அதிகாரிகளையும் பாதுகாக்கத்தான் வழி பார்க்கிறது. செய்த குற்றத்திலிருந்து கபளீத்துக் கொள்ளவே எப்போதும் முயல்கிறது.

அதற்கு ஓர் அசல் உதாரணம்: இப்போது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டிருக்கும் 'படையினரைப் பாதுகாக்கும்' சட்டமூலம். அதன் இரண்டாவது வாசிப்பு சபையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1983 ஜூலை முதல் 1987 வரையான காலத்தில் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கான பொறுப்பில் இருந்து உரியவர்களை விடுவிக்க இச்சட்டம் வகை செய்கிறது.

அதாவது படையினர் செய்த தன்னிச்சையான, பலாத்கார, அட்டூழிய நடவடிக்கைகளுக்கான பொறுப்பை அவர்களிடமிருந்து நீக்குவது என்பதாகும்.

என்னை நீதி! குற்றம் செய்தவரை நீதிமன்றம் தண்டிக்காமல் அரசாங்கமே பார்த்துக் கொள்கிறது!! பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க உதவுவது தான் உண்மையான நீதியும், அரசின் கடமையுமாகும். அதுவே சனநாயகத்தின் பண்பும் மரபும் ஆகும்.

ஆனால் இங்கே...?

எல்லாமே தலைகீழாகவே நடக்கின்றன! மக்கள் நலன் பின்தள்ளப்பட்டு, அரசினதும், அதிகாரிகளினதும் நலன் முன் வைக்கப்பட்டு, பெரும்பான்மை வாக்குப் பலம் என்ற சக்தியைக்கொண்டு அக்கிரமங்கள் எல்லாம் நியாயப்படுத்தப்படுகின்றன! மனித நீதியின் மற்றப் பக்கமே இலங்கை அரசுக்குத் தெரிகிறது! புரிகிறது!!

பர்மாவில்

# அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியில் திருப்பம்; மக்களுக்கு இராணுவம் ஆதரவு

ரங்கூன், செப். 4

பர்மாவில் அரசுக்கு எதிராக நடந்து வரும் மக்கள் கிளர்ச்சி புதிய பரிமாணம் ஒன்றைப் பெற்றிருக்கிறது.

இராணுவத்தின் பதினொரு பட்டாலியன்களும் விமானப் படையின் ஒரு ஸ்குவாட்றனும் அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

இதன் மூலம் அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தீவிரமடைந்துள்ளன.

அரச ஆயுதப் படையினர் மத்தியில் பல இடங்களில் மோதல்கள் இடம் பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயுதப் படையினர் மத்தியில் அரசுக்கு எதிரான போக்கு அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதனிடையில்—

பர்மாவில் உள்ள 15 லட்சம் முஸ்லீம்களை அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்கு ஆதரவளிக்கும் படி உலாமாக்கள் சம்மேளனம் கோரியிருக்கிறது. (எ)

## முந்தானையால் முக்காடு போடும் நிலை ஜெயலலிதாவுக்கு விரைவில் வரும்

ஜெயலலிதா முந்தானையை இழுத்து தலையில் முக்காடு போடும் நிலை விரைவில் வரும்; வரத்தான் போகிறது—

இப்படி முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

காஞ்சிபுரம் அண்ணா அரங்கில் நடந்த கூட்டம் ஒன்றில் திருநாவுக்கரசு மேலும் சொன்னதாவது;

ஜெயலலிதா ஏதோ மக்களைப் பார்க்கும் போது மட்டும் முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு வருகிறார்.

முந்தானையை இழுத்து மூடுவதால் மட்டுமே பெண்ணுக்கு நாகரீகம், பண்பு இருக்கும் என சொல்ல முடியாது; பத்தினி என்றும் சொல்ல முடியாது.

இப்படி திருநாவுக்கரசு தெரிவித்தார். (எ)

## றொக்கட் தாககுதல்

காபூல், செப் 4

கிளர்ச்சிக்காரர்கள் நேற்று காபூல் மீது பரவலாக றொக்கட் தாக்குதலை நடத்தினர்.

அப்போது 9 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என்று அறிவிககப்படுகிறது. (ஓ-எ)

## விமான விபத்து

ஹொங்கொங் செப் 4

சீன விமானம் ஒன்று கடும் மழை காரணமாக ஹொங்ஹொங் கடலில் வீழ்ந்ததால் 6 பேர் மரணமானார்கள். மொத்தமுள்ள 83 பிரயாணிகளில் மிகுதிப்பேர் மீட்கப்பட்டனர். (அ)

சிங்கப்பூர் தேர்தல்:

## 'லீ' யின் கட்சி 8 ஆவது முறையும் வெற்றி எதிர்க்கட்சிக்கு ஓர் ஆசனம் மட்டுமே!

சிங்கப்பூர், செப். 4

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தேர்தலில் ஆளும் மக்கள் நடவடிக்கைக் கட்சி எட்டாவது தடவையாக அமோக வெற்றியீட்டியது.

நேற்று நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி 80 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

எதிர்க்கட்சி வேட்பாளர் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றியீட்டினார்.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 81 ஆகும்.

ஆட்சிப்பீடத்தில் நீண்ட காலமாக பதவியில் இருக்கும் ஒரே தலைவர் என்ற பெருமையை இத்தேர்தல் மூலம் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ பெற்றிருக்கிறார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் பிரதமர் லீ செய்தியாளர் மத்தியில் பேசினார். ''இளம் தலைமுறையினரின் நம்பிக்கையை எனது ஆட்சி பெற்றிருக்கிறது''—என்று 65 வயதான பிரதமர் லீ அப்போது தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்துவதற்கு மக்கள் அளித்த அங்கீகாரமாக தேர்தல் முடிவைக் கருதுவதாக உதவிப் பிரதமர் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை எப்போதிருந்து அறிமுகப்படுத்தப்படும் என்பதை வெளியிட பிரதமர் மறுத்து விட்டார். (எ)

## விமானத்தின் பகுதிகள் அமெரிக்காவுக்கு

இஸ்லாமாபாத், செப் 4

அதிபர் ஸியா பயணஞ் செய்தபோது விபத்துக்குள்ளாகிய விமானத்தின் சிலபகுதிகள் மேலும் ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் தெரிவித்தன. (எ)

## அ.தி.மு.க. தலைமை அலுவலகம்: மூன்று அணிகள் உரிமைகோரல்!

சென்னை, செப். 4

எம். ஜி. ஆரின் மறைவைத் தொடர்ந்து அ. தி. மு. க. தலைமையகத்துக்கு ஜானகி அணியும் ஜெயலலிதா அணியும் உரிமை கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள்.

ஜெயலலிதா அணியில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து அ. தி. மு. க. தலைமை அலுவலகத்துக்கு மூன்று பிரிவினர் சொந்தம்கொண்டாடுகிறார்கள்.

மூன்றாவதுபிரிவு, நாவலர் அணியாகும்.

இது தொடர்பாக நாவலர் அணியைச் சேர்ந்த அரங்கநாயகம் சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

அ. தி. மு. க தலைமை நிலையச் செயலாளர் நான்தான் என்னை நீக்க ஜெயலலிதாவுக்கு அதிகாரமில்லை. ஆகவே தலைமை அலுவலகத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்—என்று அரங்கநாயகம் தனது மனுவில் கூறியிருக்கின்றார். (எ)

வெளி உலகில்

## 85 யுத்த நிறுத்த மீறல்கள்; ஈராக் குற்றச்சாட்டு

பக்தாத், செப். 4

ஈரான், வளைகுடாவில் 85 தரம் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டதாக ஈராக் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

வளைகுடா யுத்தம் அமுலுக்கு வந்த 14 தினங்களில் இந்த மீறல்கள் இடம் பெற்றதாக பக்தாத் அரசு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பிரிட்டிஷ் பிரதமர் பாட்டி ஆகிறார்!

லண்டன், செப் 4

பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தாட்சர் அடுத்த மாதம் பாட்டியாகப் போகின்றார்.

அவரின் மகன் மார்க் தாட்சரின் மனைவி டயானா அடுத்த மாதம் குழந்தையை பிரசவிக்க இருக்கின்றார்.

இந்த மார்க் தாட்சர் சவுதி அரேபியாவில் கார் ஓட்டப்பந்தயம் ஒன்றில் கலந்து கொண்ட போது சஹாரா பாலைவனத்தில் காணாமற்போய் இருந்து பின்னர் கண்டு பிடிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கடாபி வேண்டுகோள்

திரிப்பொலி, செப். 4

இஸ்ரவேலுக்கு எதிராக ரகசிய ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்தும் படி பலஸ்தீனியருக்கு லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபி அறைகூவல் விடுத்தார்.

லிபியாவில் முடியாட்சியைக் கவிழ்த்து குடியரசை ஸ்தாபித்த 19 ஆவது ஆண்டு நிறைவு அண்மையில் கொண்டாடப்பட்டது.

அதில் கலந்து கொண்டு பேசுகையில் கடாபி இவ் வேண்டு கோளை விடுத்தார். (எ)

## இன்று திறப்புவிழா

யாழ் மாவட்ட மினிசினிமா சங்கக் காரியாலயத் திறப்பு விழா இன்று 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் யாழ்- பண்ணை கூட்டு வீதி, இலக்கம் 42/2 இல் அமைந்துள்ள கட்டடத்தில் நடைபெறும். (இ-சி)

## நினைவில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற கல்வித் துறை தொடர்பான கருத்தரங்குகளில் கலந்து கொண்டு யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். ஆசிரிய சங்கங்களில் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றினார். கல்விப் பணி மூலம் சமுதாயப் பணி புரிந்த பெரியார் தமது ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறிய பின்பும் எமது கல்லூரியுடன் தொடர்பு கொண்டிருந்தார். இறுதியாக எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றினார். அமரராகிவிட்ட எமது ஆசானின் நினைவு என்றும் மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## யாழ்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தது - அதனால்தான் பதவியினால் புகழ் பெறும் பலர் மத்தியில் அமரர் தன் சேவையினால் பதவியை அலங்கரித்தவர் என்று உயர்ந்து நிற்கின்றார்.

அவர் கடமையாற்றிய பாடசாலைகளில் அவர் நாமம் நிலைக்கும். அதன் மூலம் யாழ் இந்துச்சமூகமும் பெயர் பெறும்.

இறுதியாக அவர் குடும்பத்தினருக்கு இம்மடல் மூலம் ஒரு செய்தி-

உங்கள் தலைவனின் இழப்பு குடும்ப இழப்பல்ல ஒரு சமூக இழப்பாகும். இது அதிதீதமான கூற்றல்ல.

# மோசடிக் காசோலைகளுக்கு பணம் வழங்கும் அதிகாரிகளே இனி அக்குற்றச் செயல்களுக்கு பொறுப்பு

## பொலிஸார் வங்கிகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, செப் 5

மோசடி செய்யப்பட்ட காசோலைகளை ஏற்றுக் கொண்டு பணம் வழங்கும் வங்கி அதிகாரிகளை, அக்குற்றச் செயல்களுக்கு இணைபொறுப்பாகக் கருதப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுவர் என்று பொலிஸார் வங்கி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

காசோலை மோசடியைத் தடுக்கத் தேவையான புதிய அதிகாரங்கள் பொலீஸாருக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்காக வங்கிச் சட்டம் திருத்தப்படும் என்று கொழும்பு மோசடிப் புலனாய்வுப்பிரிவு உதவிப் பொலீஸ் அதிபர் தியோபிளஸ் தெரிவித்தார்.

உத்தேச சட்டத்திருத்தம் விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காசோலை மோசடி செய்யும் கூட்டத்தினர் வங்கி அதிகாரிகளுடன் இணைந்தே இக்குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக கிடைத்துள்ள பல முறைப்பாடுகளைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியேற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வங்கி அலுவல்கள் நவீன கம்பியூட்டர் துணையுடன் நடைபெறுகின்றன. மோசடியை சில வினாடிகளில் இ[illegible] முடியும். அதனால் வங்கி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்தான் மோசடி செய்வது சாத்தியமாகும்.

—இப்படி உதவிப் பொலீஸ் அதிபர் தியோபிளஸ் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

மாதம் குறைந்தது 15 வங்கி மோசடிகள் பற்றி பொலீஸுக்கு முறையிடப்படுகின்றன.

வெளிநாடுகளில்வேலை செய்து விட்டு திரும்புபவர்களை, வங்கியில பணத்தை வைப்புச் செய்யாமல், வெளியில பே விவர்த்தகர்களுக்கு வட்டிக்கு கொடுக்கும்படி வங்கி அதிகாரிகளே தூண்டுகின்றனர்.

பின்னர் பணம் வாங்கியவர்கள் தலைமறைவாகி விடுகின்றனர். பணம் கொடுத்தவர் வங்கி அதிகாரியை அணுகிக் கேட்டால் அது பற்றித் தெரியாது என்று கூறி விடுகிறார்.

இப்படி பலமுறைப் பாடுகள் பொலீஸாருக்கு வந்துள்ளன.

பொலீஸார் வங்கி நிர்வாகங்களுடன் இச்செயல்கள் பற்றி அடுத்த வாரம் பேச்சுக்கள் நடத்த உள்ளனர். (ஓ-எ)

## கும்பாபிஷேகம்

பருத்தித்துறை செப்-5

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

இதனை பிரதிஷ்டா பிரதமகுரு சிவத்திரு ம. சுப்பிரமணியக்குருக்களும் மற்றும் சிவாச்சாரியார்களும் சிறப்பாக நடத்தவுள்ளனர். (இ- 118)

## சைவத்துக்கு தொண்டாற்றும் ஒரேயொரு ஆதீனம் நல்லைஆதீனமே

### பீடாரோஹண விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 5

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றுகின்ற ஒரே ஒரு ஆதீனம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமே அது மேன் மேலும் தனது சேவையைத் தொடர நல்லைக்கந்தனின் அருளை வேண்டி நிற்கின்றேன'' என ''நல்லை ஆதீன 22 ஆவது ஆண்டுவிழாச் சிறப்பு மலர்'' ''நல்லைக் கந்தன் தோத்திரங்கள்'' ஆகிய நூல்களை வெளியீட்டு வைபவத்தில் பேசுகையில் ஆதீன ஜோதி [illegible] அவர்கள் தெரிவித்தார்.

இவ்வெளியீட்டு விழா நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன 22 ஆவது பீடாரோஹண விழா வன்று நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது குருமூர்த்தி ஆலயத்தில விசேட பூஜையும் தீபாராதனையும் வேதகானமும் திருமுறைப் பாராயணமும் இடம் பெற்றன.

அதன் பின் இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்களின் பட்டணைப் பிரவேசமும் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்றன. (ஓ)

எதிர்வரும் 11 ஆம் திகதி

## கங்கண சூரிய கிரகணம் மாலைதீவில் தெளிவாகத் தெரியும்

கொழும்பு. செப் 5

கங்கண சூரிய கிரகணம் (Annular) எதிர் வரும் 11 ஆம் திகதி இடம் பெறுகிறது.

மாலைதீவில் உள்ள கான் என்ற இடத்தில் இக்கங்கண சூரியகிரகணம் தெளிவாகத் தெரியும் என்று மாலைதீவுத் தூதரகம் கொழும்பில் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்புஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிரகணத்தை உலகில் உள்ள வான சாஸ்திர நிபுணர்கள், அக்கறை கொண்டோர் காணுவதற்குரிய பயண ஒழுங்குகளை மாலைதீவு அரசு மேற்கொண்டிருப்பதாகவும், விசேட விமான சேவைகளை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாகவும் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கங்கண கிரகணம் என்பது, சூரியனின் மத்தியில் நிழலாயும் சுற்றி ஓரங்களில் வெளிச்சமாயும் மோதிரம் போன்று இருக்கக் கூடியது. (அ-எ)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## உவமானமில் காட்சி

புவி வாழு முயிரனைத்தும் காக்குந் தெய்வம்
பூபாலன் கோபாலன் புகழைப் பாடி
நவமான தேன் கீத நாதம் பாய
நல்லவிழாக் காலை நல்லையடியார் கண்டும்

சிவபாலன் வள்ளி தேவயானை சேர
சிவனார் போற் கைலாய மலையிற் றோன்றும்
உவமான மில் காட்சி மாலை கண்டும்
ஊழ ன்று உயர்பதத்தை யுறு வர் மாதோ.

— அராலி பரமேஸ்வர சர்மா —

## கொடியேந்தி வருகந்தா

வடியேறு வேலேந்தி வருபகைமை
தனை முடித்து
இடியேறு போல்முழங்கி இருஞ்சமணரைப்
பொடியாக்கி
வடிவேறு முருக்காட்டி வளமாரும் சேவலங்
கொடியேந்தி வருகந்தா! கூட அருள்
தருவாயே.

— நீர்வேலி பண்டிதர் சி. நீ. முருகேசு
(இன்று நல்லூரில் கைலாச வாகனத் திருவிழா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Kailas Catarrah Oil
**கைலாஸ் பீனிசத் தைலம்**
கண், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு. ஓயாது தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற 21 வகையான பீனிச வகைகளுக்கும் நிவாரணம் தரும்.
கிடைக்கும் இடம்
**க செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

05 - 09 - 1988 திங்கட்கிழமை

Kailas Brahmi Hair Oil
**கைலாஸ் பிரம்மி கூந்தல் தைலம்**
இத்தைலத்தை தினமும் சிரசில் பாவித்துவந்தால் தலைமுடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு நிவாரணம் தருவதோடு கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், கருமையாகவும் வளரச் செய்யும்.
கிடைக்கும் இடம்
**க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# நாம் பதவிக்கு வந்ததும் இந்தியப் படைகளை ராஜீவ் விலக்கிக் கொள்வார்

## ஸ்ரீமாவோ கூறுகிறார்

கொழும்பு, செப் 5

நாம் பதவிக்கு வந்தவுடன் இந்தியப் படைகளை பிரதமர் ராஜீவ் விலக்கிக் கொண்டு விடுவார். ஒப்பந்தத்தை ரத்துச்செய்வது குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா காலியில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அமைதியை ஏற்படுத்தவோ, பிரபாகரனைப் பிடிக்கவோ இந்திய அமைதிப்படை இலங்கையில் இருக்கவில்லை; தங்களின் புவியியல் அரசியல் நலன்களைப் பாதுகாக்கவே இந்தியப்படை இங்கிருக்கிறது.

யு. என். பி அரசின் வெளியுறவுக் கொள்கையினால் தனது பாதுகாப்பு பாதிக்கப்படும் என்று இந்தியா எண்ணியது அதன் பலனே இன்றைய இலங்கை-இந்திய ஒப்பந்தம்.

சுதந்திரக் கட்சி அரசு பதவியில் இருக்கும் நிலை ஏற்படும்போது இந்தியாவின் பயம் நீங்கி விடும். நாம் நடுநிலை வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள்.

பிரதமர் பிரேமதாஸ மக்களை முட்டாள்களாக நினைக்கிறார். சுதந்திரக் கட்சி ஆட்சியில் மக்கள் எலும்புக்கூடுகளாக நடமாடினார்கள் என்று 1977 இல் கூறிய பிரதமர் இன்று 50 சத வீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி அவஸ்தைப்படுவதாக தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் பொருளாதார, சமூக, கல்வி, தொழில் வாய்ப்புக் கொள்கை என்ன என்பதை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் நியமனப்பத்திரத்தைத் தாக்கல் செய்த பின்னர் அறிவிப்பேன்.

இப்படி அவர் கூறினார். (எ-இ)

## 21 பேர்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் குழுக்களின் இணைப்புக்குழுப் பிரமுகர் ஒருவரும் சென்றுள்ளார்கள்.

றெட்பானாநிறுவனத்தின் உதவியுடன் வடக்குக் கிழக்குப் பிரசைகள் குழு போக்குவரத்துக்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறது.

இதேவேளை அடுத்த கட்டமாகப் புறப்பட்டுச் செல்லவிருக்கும் குழுவில் இடம்பெற விரும்புபவர்கள் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (இ-5)

**SCIENCE CENTRE**
**Karaveddy**
G. C. E.(A/L) 89 One Year Course
Phy. - வர்ணம்
Che. - Peter, தில்லை, Bar
Maths - நல்லையா
Zoo. - தம்பிராஜா
Botany - சர்வா, குகாதரன்
**ஆரம்பம்: 09-09-1988**
(6304)

**உடன் தொடர்பு கொள்ளவும்**

கீழ்காணும் பெயர்களை உடையவர்களின் குவைற் விசா என்னிடம் உள்ளது.

| | |
|---|---|
| K. மகாலிங்கம் | — H 0452930 |
| K. T. நாகேஸ்வரன் | — J 0069367 |
| K. S. சத்தியராஜா | — H 0130971 |
| S. புஸ்பராஜா | — J 0272475 |
| A. சிவநாதன் | — J 0242728 |
| S. S சிவக்குமார் | — H 0231881 |
| K. M. சிறிபாலன் | — H 0057586 |
| S. சிவலிங்கம் | — F 321904 |
| V. P. குலசேகரம் | — H 0322207 |
| V. V. சந்திரசேகரம் | — H 0051063 |
| R. நாகரட்ணசிங்கம் | — H 0166494 |
| N. உதயராஜா | — H 0480645 |
| A. செல்வச்சந்திரன் | — J 0118253 |
| K. சிவராஜா | — H 0340885 |
| K. K. வசந்தராஜன் | — J 0342893 |
| K. பிறேமதாஸ் | — H 279950 |
| R. R. விஜயகுமார் | — J 0341448 |
| M. M. சின்னராஜா | — J 0401625 |
| E. R. பொன்னையா | — H 0401363 |
| M. K. மகேந்திரன் | — G 0473437 |
| A. சுந்தரம்-இந்திரா | — H 0090994 |

மேலும் உடனடியாகத் தேவை

**குவைற்**

| | |
|---|---|
| கிளீனேர்ஸ் | — 35 KD |
| மேசன் (கூலியாட்கள்) | — 50 KD |
| பணிப்பெண்கள் | — 30 KD |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
**N. சுரேந்திரன்**
( சுரேன் )
**நவாலி கிழக்கு, மானிப்பாய்.**
(ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலுக்கு அண்மையில்)
(6142)

## தேர்தலுக்....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவேண்டும்.

போர் நிறுத்த வதந்தி நீண்ட காலமாக இருந்து வந்தது. எம்மைப் பொறுத்தவரை கடந்த ஒக்டோபர் மாதம் இந்திய அரசு முறையான போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தோம்.

இக் கோரிக்கை தொடர்பாக பொது மக்களோடு இணைந்த போராட்டங்களையும் நடத்தியிருந்தோம்

ஆனால் இன்றுவரை இந்திய அரசு, தமிழ் பேசும் மக்களின் இந்தக் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-5)

## அரசியல்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வக்சற்ற தன்மையைக் காட்டுகின்றதா என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

இந்தக் கட்டத்திலாவது ஸ்ரீலங்கா அரசின் போக்கினைக் கண்டித்து இக்கைதிகளை விடுவிக்க முயற்சிக்காவிட்டால்ஒப்பந்தம் என்பது தானாகவே செயலிழக்க இந்திய அரசும் துணைபோகின்றது என்றே கருதப்பட நேரிடும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

## தீர்வு....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சட்டம் தயாராகிவிட்டது. நாடாளுமன்றத்தில் அது விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

அரசியல் கைதிகளை விடுவிப்பது இந்த வாரம் ஆரம்பமாகி 15 தினங்களில் முடிவடையும்.

அரசுக்கு எதிரான சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிலர் இந்தியாவில் உள்ளனர். அவர்கள் சம்பந்தமான பிரச்சினையும் திருப்திகரமான முறையில் தீர்க்கப்படும்.

இப்படி சண்டே ஐலண்ட் செய்தி கூறுகிறது. (இ-எ)

## ஜீப்புக்கு இருவர் பலி

மட்டக்களப்பு, செப்.5

வேகமாகச் சென்ற இந்தியப் படையினரின் ஜீப் ஒன்று வீதியோரத்தில் நின்ற இரு மாணவர்களைப் பந்தாடியது. இரு மாணவர்களும் துடிதுடித்து அதே இடத்தில் மரணமானார்கள்.

இச் சம்பவம் கடந்த வார இறுதியில் தன்னாமுனை என்னும் இடத்தில் நடந்தது.

எம்.ரமேஸ்(12 வயது) ஏ. சண்முகராஜா (13 வயது) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர். (இ-21)

## காரைநகரில் தேடுதல்

காரைநகர், செப்.5

ஸ்ரீலங்கா கடற்படை முகாமை அண்மித்துள்ள கிராமங்களான பலிகாடு, கருங்காலி, வியாவில், கேசடை போன்ற இடங்களைத் திடீரென முற்றுகையிட்ட அமைதிப்படையினர் தீவிர தேடுதலை நடத்தினர்.

வெள்ளிக்கிழமை இச் சம்பவம் நடந்தது. (இ- 73)

## நினைவுத்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஒருங்கிணைப்புக்குழு, வர்த்தகர் சங்கம, மீனவர் சங்கம், 751 மினி பஸ் சங்கம் வல்வைப் பிரசைகள், தமிழ்ஈழ மக்கள் மன்றம் ஆகியவை ஒருங்கிணைந்து இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (இ-160)

## சர்வதேச...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பகுதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் தடை இன்றிக் கிடைக்க வழிஏற்படும் என்று இந்தக் குழுவினர் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயவீடமைப்புத் திட்டம் ஒன்றையும், சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றையும் மேற்கொள்வதற்குத தேவையான உதவிகளையும் வழங்க இந்தக் குழு முன்வந்திருக்கிறது.

இந்தக் குழுவினர் வடமராட்சிக் கிராமங்களுக்கும் வலிகாமம் வடக்குக் கிராமங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவர்கள் நேற்று கொழும்பு திரும்பினர். (இ-ஐ-5)

## லொறிகள் மூலம் வரும் அகதிகள்

தாளையடி, செப் 5

அக்கராயன், வன்னேரிக்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் லொறிகள் மூலம் தொடர்ந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

புனித திரேசம்மா ஆலயம், கனகபுரம் அ.த.க. பாடசாலை, சிங்கள மகா வித்தியாலயம் உட்பட பல இடங்களில் இம்மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். (இ-144)

## வானொலி தகவல் கருவி கொள்ளை

கொழும்பு, செப். 5

திஸ்ஸமஹாரகம பொலீஸ் பகுதியில் கிரிந்தி துறைமுக அதிகாரசபைக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலித் தகவல் அனுப்பும் கருவியை ஆயுதம்தரித்த இனந்தெரியாதவர்கள் கொள்ளை அடித்துச் சென்றனர்.

அதேவேளை அம்பாந்தோட்டையில் பனமுர தொலைபேசிக் கட்டடத்தில் இருந்ததன்னியக்கத் தொலைபேசி பரிவர்த்தனைக்கருவியை இன்னொரு இனந்தெரியாதகோஷ்டி கொள்ளையடித்தது.

இதன்பெறுமதி பத்து லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## மரங்களை வெட்டக் கோரிக்கை

தாளையடி, செப் 5

கிளிநொச்சிப் பகுதியில் சில இடங்களில் வீடுகளில் சோலையாகவளர்ந்துள்ள தென்னை, மா, பலா மரங்களை வெட்டும்படி வீட்டு உரிமையாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளதாம். (இ-144)

## தப்பினர்

முல்லைத்தீவு செப்.5

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த தொழிலாளியான சி. சின்னையா என்பவர் கடமைக்கு வரும்போது துப்பாக்கிச் சூட்டில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

இதைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் பகலில் முற்றாக நீக்கும்வரை கடமைக்குச்செல்வதில்லை என மேற்படி ஆஸ்பத்திரி ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர். (இ-92)

பயிற்சி பெறும்

## ஆரம்ப ஆசிரியருக்கான மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், செப். 5

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பயிற்சி பெறும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

மேற்படி பயிற்சி நிலையத்தின் விளையாட்டுப் பொறுப்பதிகாரி திரு. ஜே. ஜேசுதாஸன் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் போட்டிக்கு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் கொடியேற்றி வைப்பார்.

திருமதி புஷ்பவதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார். (இ - க)

## வவுனியாவில் அகதிகள்: நலன்களைக் கவனிக்கக் கோரி தொண்டமானுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப்.5

அண்மையில் முல்லைத்தீவில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாகப் பெரும் எண்ணிக்கையானோர் வவுனியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வந்துள்ளனர். அவர்களின் நலன்களைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் அவசரத் தந்தி ஒன்று கிராமியத் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வட பிராந்தியப் பொறுப்பதிகாரி திரு பொ.மதுரப்பிள்ளை பிரஸ்தாபத் தந்தியை அனுப்பி வைத்திருக்கிறார்.

வவுனியாவில் வங்கிகள்மூடப்பட்டிருப்பதால் ஓய்வூதியம்பெறுவோரும் மற்றும் பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்தத்தந்தியில் கோரப்பட்டிருக்கிறது. (ஓ-ஐ)

## கடையை உடைத்து சோடா திருட்டு

பலாலி, செப். 5

அச்சுவேலி பஸ்நிலையத்துக்கு சமீபமாக அமைந்திருக்கும் கூல்பார் ஒன்று ஊரடங்கு நேரத்தில் உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த சோடாக்கள், ஏனைய குளிர்பானங்கள், திருடப்பட்டுள்ளன.

ஏறத்தாள பத்தாயிரம் ரூபா மதிக்கக் கூடிய தனது பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்தார். (இ - 119)

## ரூ.50 ஆயிரம் பறிகொடுத்தார்

யாழ்ப்பாணம் செப்.5

கட்டப்பிராயிலிருந்து யாழ் நகருக்கு மினிபஸ்ஸில் பிரயாணம் செய்த பயணிஒருவரிடம்இருந்து 50 ஆயிரம் ரூபா பிற்பொக்கட் அடிக்கப்பட்டது.

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் ஒருவரே பணத்தை இழந்தவர் ஆவார். (இ-113)

## குருக்கள் எங்கே?

வடமராட்சி, செப், 5

வடமராட்சிப் பகுதியில் பிரதமகுருக்களில் ஒருவரான தியாகராசாக் குருக்களை கடந்த 24 ஆம் திகதி முதல் காணவில்லை.

இவரது குடும்பம் அமைதிப் படையினருக்குக் கொடுத்த தகவலின் பேரில் அமைதிப்படையினர் இவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (இ - 160(

# கழுவிய உப்பை பக்கட்டில் அடைத்து விற்கும் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 5

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் முதன் முறையாக கழுவிய உப்பை பக்கட்டில் அடைத்து விற்கும் சேவையை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது.

அன்று முதலாவது விற்பனைக் கட்டளையை உப்புக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ்.வேலாயுதபிள்ளை, யாழ்-மாவட்ட உப்பு விநியோகஸ்தர் திரு. சுப்பிரமணிய செட்டியார் ஸ்தானத்துக்கு வழங்கி விற்பனையைத் தொடக்கி வைத்தார்.

கழுவிய உப்பு பக்கட் விற்பனைத் திட்டம்பற்றி உப்புக் கூட்டுத்தாபன உற்பத்தி முகாமையாளர் திரு கே. தங்கராஜா எமது செய்தியாளரிடம் சொன்னதாவது:

ஆரம்பத்தில் பத்து மெட்ரிக் தொன் சாதாரண உப்பைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர் ஒருவருக்கு 500 பக்கட் கழுவிய உப்பு கட்டாயமாக விற்பனை செய்யப்படும்.

சில தினங்களின் பின்னர் ஆயிரம் பக்கட்டுக்களாகவும் 2 ஆயிரம் பக்கட்டுக்களாகவும் விற்பனையை அதிகரிக்க இருக்கிறோம்.

கழுவிய உப்பு பக்கட்டுக்களில் அடைத்து வழங்கும் திட்டத்தின் மூலம் அநேகம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

இதனைத் தொடர்ந்து அரைத்த உப்பு. கறி உப்பு, அயடைஸ்ட் உப்பு போன்றவை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஒ-எ)

## முல்லைத்தீவிலும் உண்ணாவிரதப் போராட்டம்

முல்லைத்தீவு, செப்.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டம் முற்றாகத் தளர்த்தப்படும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அன்னையர்முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

உடனடி யுத்தநிறுத்தம் செய்து போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவும்—

வெலிஓயா உட்பட சகலசிங்களக் குடியேற்றங்களையும்தடுத்துநிறுத்தவும்-

சிறையிலுள்ளசகலதமிழ் கைதிகளையும் பாரபட்சமின்றிவிடுதலைசெய்யவும் கோரியே இப்போராட்டம் நடைபெறவுள்ளது.

கடந்தமாத இறுதியில் இப்போராட்டத்தைநடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் ஊரடங்குச்சட்டம் காரணமாகப் போராட்டம் தாமதமடைந்துள்ளது. (இ-10)

## இளவாலையில் நீல ஊர்வலம்

இளவாலை செப் 5

இளவாலை புனிதயாகப்பர் பங்கில் புனித கன்னி மரியாளின் வருடாந்த ஊர்வலம் அண்மையில் நடைபெற்றது.

இவ்வூர்வலத்தில் இளம் பெண்கள் நீல நிறச்சேலைகளுடனும் சிறுவர்கள் ஆண்கள் நீல நிறக்கொடிகளுடனும் பங்குபற்றினர்.

ஆலயத்தில் நடைபெற்ற பிரசங்கத்தில் எம். ரி. பற்றிக் அடிகளார் ''மாதாவிடம் விளங்கிய தாழ்மையான பண்புகள் எம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் மலர வேண்டும்'' என்று கூறினார். (இ)

**மரண அறிவித்தல்கள்**

**மரியம்மா அகஸ்ரின்**

திருமதி மரியம்மா அகஸ்ரின் 03. 09. 1988இல் காலமானார் இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அகஸ்ரினின் அன்பு மனைவியும், S. A. ஜோசப் (Sub Collector-Customs) திருமதி திரேசா இம்மானுவல், S.A. ஜேம்ஸ் (ஓமான்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, ஞானப்பு சுவாம்பிள்ளை (செட்டியார்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு 06-09-88 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**S. A. ஜோசப், திரேசா- இம்மானுவல்**
49, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(6138)

**போல் தம்பிநாயகம்**

தெல்லிப்பழை போல் தம்பிநாயகம் 3- 9- 88 சனிக்கிழமை காலமானார். இவர் போலினின் அன்புக் கணவரும், அருள் தம்பிநாயகம் (U. K) அன்புத்தந்தையும், பிறேமகுமாரி தம்பிநாயகத்தின் (U. K) மாமனாரும், காலஞ்சென்ற இராசேந்திரம் (Commercial Bank) காலம் சென்ற டேவிற் (U. K) திருமதி லில்லி இன்னாசிமுத்துவின் அன்புச் சகோதரரும், இன்னாசிமுத்து (இலங்கை வங்கி) திருமதி றெஜினா இராசேந்திரனதும், பேள் டேவிற் (U. K)யினது மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்கம் 5- 9- 88 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை சென் பீற்றேஸ் குடும்ப சேமக்காலையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஆ, பெனடிற் இராசதுரை
(6135)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவற்] லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05 09 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 5th September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org